★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

முன்னுள் மன்னரில் மூவரே கவர்னராவர்

புதுடில்லி, மே 3

முன்னுள் மன்னர்கள், இப்போது 'இராஜப் பிரமுகர்'களாக பதவி வகித்து வருகிறுர்கள் அல்லவா?

இவர்கள் எல்லோரும், இனி மாநில புது அமைப்பிற்குப் பின் தொடர்ந்து பதவிகளிலிருக்கமாட்டார்கள் என்றும், ஆனல், மூன்று முன்னுள் மன்னர்கள் மட்டும் கவர்னர்களாக இருப்பர் என்றும் தெரியவருகிறது.

மாநில புது அமைப்பிற்குப் பிறகு தாம் பதவியிலிருக்க விரும்பவில்லை என்று ஐதராபாத் நைசாம் தெரிவித்திருக்கிறாராம்.

(4-ம் பக்கம்-பார்க்க)

மலர் 3] சென்னை: சித்திரை 22உ வெள்ளி (4—5—56) ★ ★ வெளியூர்: சித்திரை 23உ சனி (5—5—56) [இதழ் 276

வங்காளம்-பீகார் இணைப்புக்குச் சமாதி!

நேருவின் விழைவு நிர்மூலமாகிறது!

அமைப்பைக் கோரிய வங்க முதல் மந்திரியே வாபஸ் வாங்குகிருர்!

தட்சிணப் பிரதேச ஆதரவாளர்கள் ஆர்ப்பரிப்பு அடங்குமா?

வங்காளம்—பிகார் இணைப்பு குறித்து, மிகைபட விளம்பரப்படுத்தப்பட்டது. அக்கூட்டின் விளக்கமான அறிக்கை இந்தியப் பிரதமரே தீட்டினுர் எனப் புகழ்ந்து கூறப்பட்டது. அவ்விணைப்புக்கு உடன்பட்ட வங்க—பீகார் முதலமைச்சர்களை காங்கிரஸ் பெருந்தலைகள், தேசிய ஏடுகள் அனைத்தும் பாராட்டின.

சென்னை நிதி அமைச்சர்கூட, முதல் முதலாக அத்தகு பாராட்டை, தட்சிணப் பிரதேச கூட்டுக்கு உடன்படுவதின் மூலம் முதலமைச்சர் காமராசர் பெறத்தவறி விட்டாரே என, வெளிப்படையாக நீலிக்கண்ணீர் வடித்தார். வங்க—பீகார் இணைப்பு ஏற்பாட்டை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு, தட்சிணப்பிரதேச அமைப்புக்கும் அடிகோல வேண்டும் என, சட்டசபை முடிவையும் பொருட்படுத்தாது, வாய் திறக்கும்போதெல்லாம் பிதற்றி வருகிருர் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அதற்கு ஒத்து ஊதக்கிளம்பி இருக்கிருர் புதிய காங்கிரஸ் இடந்தேடி மாஜி இராமநாதபுரம் அரசர்!

ஆச்சாரியார், தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்துக்கு புதுப்புது பாடியமும், புதைப்பொருள் ஆராய்ச்சியும் கூறிவருகிருர். சில ஏடுகள், தட்சிணப்பிரதேச அமைப்பு ஏற்பாட்டை ஒரு பலம் பொருந்திய ஆயுதமாகப் பயன்படுத்தி, தம் தம்முடைய தனிப்பட்ட பகையை முடித்துக்கொள்ள ஜெயபேரிகைக் கொட்டிவருகின்றன.

இவ்வளவையும், ஆழக்குழிதோண்டி புதைத்திடும் வகையில், வங்க முதலமைச்சர், தாமே மனமுவந்து ஏற்றுக்கொண்ட வங்க—பீகார் இணைப்புக்கு சமாதிகட்டத் துணிந்துவிட்டார். வங்கத்தில் நடந்த இரு துணைத் தேர்தல் முடிவுகளை ஒரு புகலாகக்கொண்டு, தமக்கு எதிராக வங்க அரசியலில் கிளம்பி இருந்த கொந்தளிப்பைத் தவிர்த்துவிட அடிகோலிவிட்டார் முதலமைச்சர் டாக்டர் ராய்.

கொட்டு முழக்கோடு கிளம்பிய வங்க—பீகார் இணைப்பு ஏற்பாடு அழுவாரற்ற சவக்குழி பிணமாகிவிட்டது. இனி தட்சிணப்பிரதேச அமைப்பு முயற்சிக்கும் கல்லறை கட்டவேண்டியதுதான்.

தட்சிணப்பிரதேச அமைப்பை எப்படியும் நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சிப்போம் என்ற உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த்தின் ஓங்காரக் கூச்சல், இனி மெள்ள மெள்ள ஈனக்குரலாக இறுதியில் இல்லாதொழிந்தாக வேண்டும். அதுவே சிறந்த அரசியல் யூகமாகும். வங்க முதலமைச்சர் காட்டும் வழியை ஒரு உயர்ந்த படிப்பினையாகக் கொண்டு தட்சிணப்பிரதே முயற்சியாளர்கள் இனி வாயடங்க வேண்டும்!

மேற்கு வங்கத்தில் கல்கத்தாவிலும், செஜிலியிலும் இரண்டு துணைத் தேர்தல் நடைபெற்றன. இரண்டிலும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட இரண்டு அபேட்சகர்களும் தோல்வியுற்றனர்.

கல்கத்தா நகரில் நடைபெற்ற மக்கள் சபை துணைத் தேர்தலில் வங்க—பீகார் இணைப்பு எதிர்ப்புக் குழுவின் தலைவரான மே. கே மித்ரா, காங்கிரஸ் சார்பில் நின்ற அசோக் சென் என்பவரைத் தோற்கடித்துவிட்டார்.

இத்தேர்தல் முடிவை அடிப்படையாகக்கொண்டு, தனது வங்க—பீகார் இணைப்பு முயற்சியைக் கைவிட்டுவிட்டதாக வங்க முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

இதுபற்றி, வங்க முதலமைச்சர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"ஜனவரி 24-ல் நானும், பீகார் முதலமைச்சர் டாக்டர் கிருஷ்ண சின்ஹவும் கூட்டாக வங்க—பீகார் இணைப்பை காங்கிரஸ் செயற்குழுவுக்கு எழுத்து மூலம் அறிவித்தோம். அதை, காங்கிரஸ் செயற்குழு வரவேற்றது. அதுவுமன்றி, அமிர்தசரஸ் மாநாட்டின் காங்கிரஸ் பொருள் ஆய்வுக் குழுவும் அதற்கு ஆதரவு கொடுத்தது."

"நாங்கள் தந்த இணைப்பு யோசனையில், மாகாண சீரமைப்புக்கு மொழியை மட்டுமே அடிப்படையாகக்கொள்ளாது, இந்திய ஒற்றுமைக்கு உடன்பாடுடைய கொள்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தோம். இணைப்பு பற்றிய விளக்கம் எதுவும் தரப்படவில்லை. அந்நிலையில் மக்கள் கருத்தறிவதற்கும் இடமில்லை.

"ஜனவரி 31-ல் நான் வெளியிட்டிருந்த அறிக்கையில், 'இணைப்பு' என்ற சொல்லுக்குப் பதிலாக, 'கூட்டு' என்ற சொல்லைக் குறிப்பிட்டிருந்தேன்; காரணம், 'இணைப்பு' என்பது இணையும் வங்கம் பீகார் மாகாணங்களின் தனித்தோற்றத்தை பலவந்தப்படுத்தி அழித்துவிடக்கூடிய விளைவுடை

(4-ம் பக்கம் பார்க்க)

உணவுப் பொருள்கள் மீதுள்ள விற்பனை வரி அதிகரிக்கப்படுமா?

புதுடில்லி, மே. 3—

2-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் விற்பனை வரி மூலம் மாநிலங்களில் அதிகப்படியாக ரூ 112 கோடி பெறுவதற்கு சில உணவுப் பொருள்கள் மீதுள்ள விற்பனைவரி அதிகரிக்கப்படுமாம். மற்றும் பல பண்டங்களுக்கும் விற்பனை வரி விதிக்கப்படுமெனத் தெரிகிறது. தேசிய முன்னேற்றக் 'கவுன்சி'லில் இப்பொழுது ஏற்றுக்கொண்டபடி, ரூ 225 கோடிக்கு மேற்கொண்டு வரிகள் மூலம் மாநிலங்களில் பெறுமாறு திட்டக் குழு கூறியுள்ளது.

திட்டக்குழு யோசனை

புதுடில்லி, மே-3—

நாட்டில் பணப் பெருக்கத்தால் ஏற்படும் விளைவுகளைத் தவிர்ப்பதற்கு 2-வது திட்டத்தில் வரிகள் மூலம் எழுப்பவிருக்கும் ரூ. 450 கோடியை 850 கோடியாக அதிகப்படுத்த திட்டக்குழு யோசனை தெரிவித்துள்ளதாம்.

விலை ஏற்றத்திற்கான காரணம் புரியாத மர்மமா யிருக்கிறதாம்!

சென்னை சர்க்கார் அதிகாரிகள் திகில்

டில்லி அரிசி நியாய விலைக்குத் தரப்படும் என சுப்பிரமணியம் தகவல்

சென்னை, மே. 3—

அரிசி முதலிய உணவுப் பண்டங்களின் விலை ஏகமாக ஏறிக் கிடப்பதற்கு என்ன காரணம் என்பது சர்க்கார் அதிகாரிகளுக்கு இன்னும் பிடிபடவில்லையாம்.

இது ஏதோ மர்மமான அற்புதமாயிருப்பதாயும், முதன்மந்திரி சுலபமாக, 'இது வியாபாரிகளின் விஷமத்தனம்' என்று கூறியது ஏற்கக் கூடியதல்லவென்றும், விலை ஏற்றத்திற்கான காரணம் எங்கோ புதைந்து கிடப்பதாயும் சர்க்கார் அதிகாரிகள் கூறுகின்றனர்.

என் இந்த ஏகமான விலை ஏற்றம் என்பதைக் கண்டறிய முற்பட்ட அதிகாரிகளின் நிலை அது!

தாங்கள்தான் இந்த விபரீதத்திற்குக் காரணம் என்று முதன் மந்திரி கூறியது கண்டு, வியாபாரிகள் கோபமடைந்திருப்பதாயும், மாநில மத்திய சர்க்கார்களின் தவறான கொள்கைகளே விலை ஏற்றத்திற்குக் காரணம் என்று முணுமுணுப்பதாயும் கூறப்படுகிறது.

இதற்கிடையில், சென்னை நிதி மந்திரி சுப்பிரமணியம், டில்லியிலிருந்து இன்று திரும்பியதும், டில்லி சர்க்கார் வசமுள்ள ஏராளமான நல்ல அரிசியை மார்க்கெட்டிற்குக் கொண்டுவர ஏற்பாடு செய்வதாயும், அந்த அரிசி, பட்டணம்படி 12 அணாவிலையில் கிடைக்கும் என்றும், எனவே சீக்கிரமே உணவுப் பொருள்கள் விலை ஏற்றம் மக்களைப் பாதிக்காது செய்துவிடலாம் என்றும் கூறியிருக்கிறார்.

கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக, மத்திய சர்க்கார் வசமுள்ள அரிசி விநியோகிக்கப்படும் என்றும் அதனால் நியாய விலைக் கடைகள் திறக்க வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் கூறினாராம்.

கம்யூனிஸ்டு கட்சிக்கு புத்தி வந்துவிட்டதாம்!

காங்கிரசை எதிர்க்க மற்றக் கட்சிகளுடன் கூட்டு சேராதாம்!

'வடிகட்டின வகுப்புவாதி'களுடன் கூட்டு சேர்ந்திருந்ததாம்!

'பிற்போக்காளரை' முன்னர் கட்டித் தழுவியதாம்!

தேர்தலில் சில இடங்களுக்கு மட்டுமே தனித்து போட்டியிடுமாம்!

இது ஆந்திரத் தேர்தல் மூலம் கிடைத்த படிப்பினையாம்!

காங்கிரசிற்கே செல்வாக்கு இருக்கிறதாம்!

இராமமூர்த்தி அய்யரின் 'விஞ்ஞான அரசியல்' குருட்டுத்தனம்

சென்னை, மே 3—

"சென்னை மாநிலத்தில், கம்யூனிஸ்டுக் கட்சியினர், வரும் பொதுத் தேர்தலில் பெரும்பாலான இடங்களுக்குப் போட்டியிட இயலாது; ஏனெனில், இங்கு, காங்கிரசின் செல்வாக்கு, பலம், அசைக்க முடியாததாக ஆகிவிட்டது. எனவே, இங்குமங்குமாக, கம்யூனிஸ்டுக் கட்சிக்கு பிடிப்புள்ள சில இடங்களில் மட்டுமே கட்சி போட்டியிடும்,"

என்று, கம்யூனிஸ்டுக் கட்சி 'பொலிட்பீரோ' உறுப்பினர், தோழர் பி. இராமமூர்த்தி அய்யர் பகன்றிருக்கிறுர்.

மேலும் அவர், 'காங்கிரசின் எதிர்ப்பாளர்கள் என்பதாலேயே இதர கட்சிகளுடன் சேர்ந்து, கம்யூனிஸ்டுகள் 'ஐக்கிய முன்னணி' அமைக்கமாட்டார்கள்' என்று பாலக்காடு கம்யூனிஸ்டு காங்கிரசில் முடிவாகியிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறுர்.

கடந்த கால அனுபவத்திலிருந்து இப்போது புத்தி பெற்றுவிட்டதாகவும் இராமமூர்த்தி அய்யர் பிரலாபித்திருக்கிறுர்.

'காங்கிரஸ் எதிர்ப்பு ஐக்கிய முன்னணி'களை சென்னை முதல், வேறு பல மாநிலங்கள் வரை அமைத்தபோது, அதில் ஈடுபட்டதினுல் கம்யூனிஸ்டுக் கட்சி பலதரப்பட்ட அனுபவங்களைப் பெற்றிருக்கிறதாம்; அந்த அனுபவங்களே இனியும் காங்கிரஸ் எதிர்ப்பு முன்னணி அமைக்கக்கூடாது என்ற புதிய ஞானோபதேசத்தைத் தந்ததாக அந்த கம்யூனிஸ்டு தலைவர் கூறியிருக்கிறுர்.

இதுமாதிரியான காங்கிரஸ் எதிர்ப்பு முன்னணிகளில், பல நேரங்களில் கம்யூனிஸ்டுக் கட்சி, தீவிரமான பிற்போக்குவாதிகள் முதல், பழுத்த வகுப்புவாதிகளுடனும் கூடச் சேர வேண்டியதாகிவிட்டதாம்— தெரிவித்திருக்கிறுர், இராமமூர்த்தி அய்யர்.

'எனவேதான், காங்கிரசிலேயே உள்ள முற்போக்காளர்களை அதிகமான அளவில் [illegible] வைத்திருக்கிறேன் [illegible] வேண்டும் [illegible] அமைச்சர் டி. டி. கிருஷ்ண [illegible] கானர் [illegible] கூறியிருக்கிறுர். இந்த [illegible] வேண் [illegible] மனப்பான்மையை மேற் [illegible] கொள்வதே அறிவுடைமையாகும்."

—[illegible]

நம் நாடு

சென்னை 4—5—'56 வெள்ளி

புதிய கொள்கை

அகில இந்தியாவிற்குமான புதியதொரு தொழில் கொள்கையை டில்லி சர்க்கார் வெளியிட்டிருக்கிருர்கள்.

1948-ம் ஆண்டில் தெரிவிக்கப்பட்ட தொழில் கொள்கையிலிருந்து புதிய கொள்கை, அடிப்படையில் சிறியதொரு மாற்றத்தை மட்டும் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கார் நடத்தும் தொழில்கள், தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும் தொழில்கள் என்று இரு பிரிவாக வகுக்கப்பட்டிருந்த 1948-ம் ஆண்டுக் கொள்கை, இப்போது, சர்க்கார் மட்டுமே நடத்தும் தொழில்கள், சர்க்காரும் தனிப்பட்ட முதலாளிகளும் கூட்டாகச் சேர்ந்தோ தனித் தனியாகவோ நடத்தும் தொழில்கள், சர்க்கார் தலையிடாத தனிப்பட்டவர்களால் மட்டுமே நடத்தப்படும் தொழில்கள்' என்று மூன்று துறையாகப் பிரிக்கப்படும் என்று புதிய கொள்கையாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

முன்னைய கொள்கைப்படி, ஆதாரத் தொழில்களில் ஒன்பது மட்டுமே சர்க்கார் நடத்துபவை என்றிருந்தது, இப்போது, பதினேழு ஆதாரத் தொழில்களில் சர்க்கார் மட்டுமே ஈடுபடலாம் என்று விரிவாக்கப்பட்டிருக்கிறது.

சர்க்காரும், தனியாரும் நடத்தக்கூடிய தொழில்கள் 12 என்பதும், இவை இருபத்து ஒன்பதும் போக, எஞ்சும் இதர பெரிய—சிறிய தொழில்கள் அத்தனையும் ஏகபோகமாக தனிப்பட்ட முதலாளிகளின் ஆதிக்கத்திற்கு விடப்படும் என்பதும் புதிய தொழில் கொள்கையின் இதர முக்கியமான அம்சமாகும்.

காங்கிரசின் 'சோஷலிச மாதிரி சமூக அமைப்பு' என்ற ஆவடித் தீர்மானத்திலிருந்து 'மாதிரி' நீங்கிய அமிர்தசரஸ் தீர்மானம்தான், இந்தப் புதிய தொழில் கொள்கையின் அடிப்படை என்று, பிரதம மந்திரி பண்டித நேரு மக்கள் சபையில் விளக்கம் கூறியிருக்கிருர். ஆனல் 'கலப்புப் பொருளாதார'த்தை வலியுறுத்தும் இந்த புதிய கொள்கை, சோஷலிச சமூக அமைப்பிற்கான உண்மையான அடிப்படையுடன் உடன்பாடு உடையதுதான என்ற கேள்விக்கு, சர்க்கார், தெளிவான விளக்கம தரவில்லை.

அடிப்படை, ஆதார கேந்திரத் தொழில்களில் முக்கியமானவற்றை எல்லாம் தனிப்பட்ட முதலாளிகள் தோற்றுவிக்க முடியாது என்ற புதிய கொள்கையின் மூலம், டெல்லி சர்க்கார், எந்த ஒரு தொழிலையும் தம்மிஷ்டம்போல், தாம விரும்பும் இடங்களில் நிறுவிக் கொள்ளும வாய்ப்பை [illegible] படுத்திக்கொள் [illegible] எந்த [illegible] துவங் [illegible] மந் [illegible] கார்களைப் பலவீனப்படுத்தி, ஜனநாயக அரசு முறையின் உண்மையான பலன்களை மக்கள் பெறமுடியாது போய்விடச் செய்வதாகும் என்று கூறப்படுவதில் நியாயம் இல்லாமல் இல்லை.

மக்களின் அன்ருட வாழ்க்கைக்குத் தேவையானபொருள் உற்பத்தி, எஞ்சினியரிங் நிறுவனங்கள், சர்க்கார் துவங்கும் பெரும் தொழில்களுக்குத் தேவையான இயந்திர சாதனங்களை உற்பத்தி செய்தல், பஞ்சாலை முதலியன எல்லாம் முழுக்க முழுக்க தனிப்பட்ட முதலாளிகளின் ஏகபோக ஆதிக்கத்திற்கு இரையாக்கப்படுவது, இன்றைய சர்க்காரின் கண்ணேட்டத்திலிருந்தும் கூட எவ்வளவு தூரம நியாயமானது என்பது விவாதத்திற்குரிய ஒன்ருகும்.

இவை எல்லாவற்றையும் இல்லாவிடினும் இவற்றில் சிலவற்றையேனும் கூட்டுறவு முறையில்—மக்கள் நேரடியாக நிர்வாகத்தில்பங்குபெறக்கூடிய வகையில் தோற்றுவித்து, நிர்வகிக்க முடியும் என்று முற்போக்காளர்கள் பலர் கூறிவரும் யோசனையை, டில்லி சர்க்கார் கருத்தில் கொள்ளாதது வருந்தற்குரியதாகும்.

சர்க்கார் நடத்திவந்த ஒன்பது கேந்திரத் தொழில்கள், இப்போது பதினேழாக விரிவாகும்போது சர்க்கார், கடந்த காலத்தில் தாங்கள் நடத்திவரும் தொழில்களில் ஏற்பட்ட பெரும் ஊழல்களை மனதில் கொண்டு, மேலும் மேற்கொள்ளும் புதிய தொழில்களினும் இந்த ஊழல் நாற்றம் பரவாது பார்த்துக்கொள்வது அவசியம்; இன்றேல், 'சர்க்கார் தொழில் நடத்துவதற்குத் திறமையற்றவர்கள்—இலாயக்கற்றவர்கள்' என்ற அவப்பெயரைத் தாங்கிக் கொள்ள வேண்டிவரும்.

முதலாளிகளால் எதிர்க்கப்படுகிறது என்பதால், புதிய கொள்கை முற்றிலும் முற்போக்கானது என்றும் கூறிட முடியாது.

முற்போக்கானதோ பிற்போக்கானதோ, டில்லி ஏகாதிபத்தியத்தின் இந்தக்கொள்கை, எவ்வகையாலும், தென்னட்டிற்குப் பயன்தரப்போவதில்லை என்பது மட்டுமின்றி, ஒருவகையில் பாதகம் விளைவிக்கக்கூடியதுமாகும்; ஏனெனில், பெரும தொழில்களோ, அல்லது சிறு தொழில்களோ, அடிப்படைத் தொழிலோ, ஆதாரத் தொழிலோ, கனரகதொழிலோ, கேந்திரத் தொழிலோ—

அதைத் துவங்குபவர்கள் டெல்லி சர்க்காரோ, அல்லது முதலாளிகளோ எவராலும் எந்த ஒரு தொழிலையும் தென்னட்டில் நிறுவப்போவதில்லை அல்லவா? நிறுவப்படுமதொழில் பயன் தரப்போவது வடநாட்டவருக்குத்தானே என்று—நாம அல்ல — நமது எதிரிகளாயிருக்கவேண்டும் என்று விரும்புகிறவர்களே, இன்ரே நாளையோ கூறுவார்கள்.

கோடிக்கணக்கில் பணம் விழுங்கப் போகும் அம்பர் ராட்டை!

பரிசோதனை முடியுமுன்பே வரிப் பணத்தைப் பாழடிக்கத் திட்டமா?

காந்தியார் பெயரால் இந்த அநியாயமா?

"'அம்பர் இராட்டை' என்ற பெயர்—ஏகாம்பரம் என்ற ஒரு தமிழன் பெயரிலிருந்து தோன்றியது. அந்த இராட்டையைக் கண்டுபிடித்த அவர், இன்று இராட்டையின் ஆதரவாளர்களால் புறக்கணிக்கப்பட்டு பட்டினியால் வாடி வதங்குகிருர் என்று ஒரு வதந்தி உலவுகிறது. ஆனல், அவர் கண்டுபிடித்த கருவியைப் பரப்புவதற்காகக் கோடிக்கணக்கில் செலவழிக்கவிருக்கிருர்கள். திரு ஏகாம்பரம் நீதி பெறுவதற்காக, அறப்போர் தொடங்க எண்ணிவருவதாகவும் செய்திகள் உலவுகின்றன.

"அந்த முறையில் தன்னைப் பிரபலப்படுத்திக்கொள்ள வேண்டாமென்று நாம் அவருக்கு ஆலோசனை கூறுகிருேம்; இந்தப் பொய்யான 'கண்டுபிடிப்பால்' கோடிக்கணக்கான ரூபாய்களை விழுங்கியது கண்டு கோபமடைந்த மக்கள் அதைக் கண்டுபிடித்தவர்மேல் சீறியெழுந்து கொல்லவும் கூடுமல்லவா ?"

இவ்வாறு, 'சுதந்திரா' என்ற ஆங்கில இதழில், 'சேது' என்பவர் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கட்டுரையில், மேலும் அவர் குறிப்பிட்டிருப்பதாவது :—

"அம்பர் இராட்டையைப் பற்றி பத்திரிகைகளில் அடிக்கடி பரபரப்பூட்டும் செய்திகளும், ஒன்றுக்கொன்று முரணுன கருத்துக்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதுபற்றி அமைச்சரவைக்குள்ளேயே வேறுபாடுகள் வளர்ந்து வருகின்றன. பொதுமக்களுக்கு வெளிப்படையாகத் தெரியும் அளவில் அங்கு அமைச்சர்களிடையே பிளவுகள் நிலவுகின்றன. அமைச்சர் திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரியும், தேஷ்முக்கும் ஒன்று சேர்ந்து அம்பர் இராட்டைத் திட்டத்தை எதிர்க்கிருர்கள். வேருெரு பக்கத்தில் அமைச்சர் நந்தாவும், ரெட்டியும் அதனை முழுமூச்சுடன் ஆதரிக்கிருர்கள். தலைமை அமைச்சர் நேருவோ, தமது வழக்கமான இயல்புப்படி நிறையப் பேசினுலும், அப்பேச்சில் வெளியிடுகின்ற கருத்துக்களோ மிகக் குறைவாயிருக்கிறது. அவர் இவ்விடயத்தில் நடுநிலைமை வகித்துக்கொண்டு, ஒருவருக்கொருவர் ஒத்துவாழும் முறையைப் போதித்துவருகிருர்.

அம்பர் இராட்டைத் திட்டத்தில் எத்தனை கோடி செலவிடப் போகிருர்கள் என்பது இன்னும் திட்டமாயில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மட்டும் இதற்கென ரூ 200 கோடி செலவிடப்படவிருக்கிறது. அதில் ரூ. 80 கோடி மானியமாகவும், ரூ. 120 கோடி மூலதன முதலீடாகவும் வழங்கப்படும். அரசாங்கம் தரும் இந்த ஆதரவு நீங்கலாகத் தனிப்பட்ட 'காந்தி நிதி', 'கதர் போர்டு' போன்ற நிறுவனங்களும் தங்களிடம் குவிந்திருக்கும் கோடிக்கணக்கான ரூபாய்களை இந்தத் திட்டத்தில் செலவிடுவதற்கு ஆர்வம் காட்டி, வாய்ப்பை எதிர்நோக்கி இருக்கின்றன. ஏழ்மையும், பசியும், பட்டினியும் நிறைந்த நம்நாட்டில் இப்படிக் கோடிக்கணக்கான ரூபாய்களை வீணுக வாரியிறைப்பதை நினைக்க வருத்தமாயிருக்கிறது.

"வாசகர்களில் யாருமே அம்பர் இராட்டையைக் கண்ணுல்கூடக் கண்டிருக்கமாட்டார்களென நான் யூகிக்கிறேன். அரசாங்கச் செய்தி அலுவலகங்கள் பலவற்றிலும் விசாரித்த பிறகு அதனுடைய 'மாதிரி' ஒன்று சென்னையிலிருப்பதாகவும், அதை ஒரு அதிகாரி பரிசோதனை செய்து வருவதாகவும் தெரிந்தது அதை நான் சென்று பார்வையிட்டேன். ஒரு ஆலையில் வேலை எவ்விதம் நடைபெறுகின்றதென்பதைக் காட்டப் பள்ளிக்கூடங்களில் வேண்டுமானுல் இந்த 'மாடலை'ப் பயன்படுத்தலாம்; ஆனுல் நூல் உற்பத்தி என்ற வகைக்கு இதை உபயோகிக்கவே முடியாது

"இதில் ருசிகரமான மற்ரெரு விஷயமென்னவெனில், அம்பர் இராட்டை இன்னும் பரிசோதனை நிலையிலேயே இருக்கிறது என்பது தான்.

"அம்பர் இராட்டை பரிசோதனை வெற்றியளிக்கக்கூடியது தான் என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஆய்ந்து தீர்ப்புக் கூறும் வரையில் சிறிது பொறுத்திருந்தாலென்ன ? அதற்குள் கோடிக்கணக்கான ரூபாய்களையுமா செலவிட வேண்டும் ?

"பொதுப் பணத்தை இவ்விதம் பிடிவாதமாக வீணுக்கும் செயலனைத்தும் மகாத்மா காந்தியின் பெயரால் செய்யப்படுவது மேலும் வருத்தப்படுதற்குரியதாகும் மகாத்மா உயிரோடு மட்டும் இப்போது இருந்திருந்தால், அவர் இத்தனை பெரிய வீண்செலவை அனுமதித்திருக்கவே மாட்டார். காந்திஜியிடத்திலும் சில குறைபாடுகளிருந்தன ; அதில், அவர் சர்க்காவில் நம்பிக்கை வைத்திருந்தாரென்ற உண்மையும் ஒன்று ; ஆனுலும், அவர் தான் தொடங்கிய கதர் இயக்கத்தைப் பொதுப்பணத்தைக் கொண்டு நடத்தவில்லை ; அரசாங்க மான்யங்களையும் வேண்டவில்லை ; பொதுமக்கள் விருப்பத்தோடு வழங்கிய நன்கொடைகளையும் நிதிகளையும் கொண்டே அதை அவர் நடத்தினுர்.

"மகாத்மாவின் வழியில் நடப்பதாகக் கூறிக் கொள்ளுபவர்கள் இன்று அவர் கூறிய உண்மை நெறிக்குப் புறம்பாக நடந்துகொள்கிருர்கள்.

"விஞ்ஞானத்தின் முடிவை ஆலோசயாமல் விரைந்து செல்லும் அம்பர் இராட்டை ஆதரவாளர்கள், உண்மையான விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை இந்தியாவில் பயன்படுத்தும் முயற்சியிலேயே மாறுபட்ட விதிகளைக் கையாளுகிருர்கள்.

"பி. சி. ஜி. அம்மை குத்தும் முறையை ஒரு உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம். உலகிலுள்ள வைத்திய நிபுணர்கள் அனைவராலும் அது நல்லது என ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. இருந்தபோது சி. இராசகோபாலாச்சாரியார் போன்ற பெரிய காங்கிரஸ்காரர்கள் அதன் பலாபலன்களில் சந்தேகம் தெரிவித்து, அதைத் தவிர்ப்பதற்கு எதிர்ப்பு இயக்கங்கூட நடத்தினர். பி. சி. ஜி. பரிசோதனைக் கட்டங்களை எல்லாம் கடந்துவந்த ஒன்று; உலக நாடுகளிலுள்ள மருத்துவர்களெல்லாம் அதைப் பயன்படுத்திவருகின்றனர். அப்

(3-ம் கலம் பார்க்க)

'இந்தியாவின் ஒற்றுமை' புதிய விஷயமல்லவாம்!

நீண்ட நாட்களாக 'இந்தியா' இருந்துவருகிறதாம்

வேறுபாடுகளுக்கிடையேயும் ஒருமைப்பாடு உண்டாம்

பண்டித பந்தின் பெரும் புரட்டு

'வடநாட்டின்மீது தென்ஞடு போர் தொடுக்கும்' என்று டாக்டர் அம்பேத்கார் மாநிலங்கள் சபையில் அச்சுறுத்திஞரல்லவா ? அதற்குப் பதில் தருவதாக நினைத்து, உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் அவர்கள், வரலாற்றையே பெரும்அளவு தீர்த்துப் புரட்டு செய்ய முற்பட்டிருக்கிருர்.

நீடூழிக்காலமாக 'இந்தியா' என்ற நிலப்பரப்பு இருந்து வருகிறதாம்.

இந்தியாவில், மக்களிடையே ஒற்றுமை இருக்கிறதாம் ! இந்தியாவின் ஒற்றுமை என்பது புதிய விவகாரமல்லவாம் ! பெரும் பொய்யை—முழுப் பூசணியைச் சோற்றில் மறைக்கும் பொய்யைத் துணிந்து கூறியிருக்கிருர், பண்டித பந்த் !

அவர் கூறியதாவது :—

"நூறு ஆண்டுகளுக்கு முன்னுல் அமெரிக்காவில் நிகழ்ந்தது போல இந்தியாவிலும் வடநாட்டிற்கும்—தென்ஞட்டிற்கும் போர் மூளும் என்று, டாக்டர் அம்பேத்கார் தனது பயத்தைத் தெரிவித்திருக்கிருர். அமெரிக்கா போன்று இங்கும் வடநாடு — தென்ஞடு சண்டை நிகழும் என்று அவர் கூறுகிருர்.

"இதுபோன்ற கற்பனையான ஆத்துகளுக்கு டாக்டர் அம்பேத்கார அடிமையாகிவிடக் கூடாது.

"இந்தியாவின் ஐக்கியம் என்பது ஒரு புதிய விஷயமல்ல (!)

"தொன்றுதொட்டு, 'இந்தியா' இருந்துவந்திருக்கிறது. இந்தியாவின் தேசப் பட எல்லைக் கோடுகளில்கூட 'யாத்ரீக ஸ்தலங்கள்' இருக்கின்றன. (!)

"வாழ்க்கையில் இந்தியாவில் உள்ள மக்களிடையே எத்தனையோ வேறுபாடுகளிருப்பினும், வாழ்க்கை அடிப்படை ஒன்ருகவே இருந்து வந்திருக்கிறது.

"பிரிவினைச் சக்திகள், மொழி வெறி, மாகாணப்பித்து, அது போன்ற தீயசக்திகள் இவற்றிற்கு எதிராக நாம் போராட வேண்டியதுதான் ; ஆனுல், அதற்காக இந்தியாவின் ஒரு பகுதி, மற்ரெரு பகுதியுடன் போர் தொடுக்கும் என்று எண்ணுவது தவறு.

"அரசியல், சமூக அடிப்படை ஆதார விவகாரங்களில், இந்தியாவில் ஒருமைப்பாடு பெருமளவு இருக்கத்தான் செய்கிறது."

சர்க்காரை ஏமாற்ற சதி செய்த அதிகாரி

மூன்று ஆண்டுக் கடுங்காவல்; ரூ. 10,000 அபராதம் விதிக்கப்பட்டார்

டெல்லி சர்க்காரின் நெய் பேர ஊழல்

புதுடில்லி, மே. 2—

இத்தனை நாள் டெல்லியின் பல்வேறு துறை ஊழல்கள் வெளிவந்து கொண்டிருந்தன.

ஜீப் கார் ஊழல், 27 பேர ஊழல், தற்காப்பு இலாகா சாதனங்கள் வாங்கியதில் ஊழல்—என்று, செய்திகள் தரப்பட்டு வந்தன.

இப்போது நெய் வாங்கியதில் நடைபெற்ற மோசடி பற்றி தகவல் கிடைத்திருக்கிறது.

டெல்லி சர்க்காரின் பொருள்கள் வாங்கும் முன்னாள் பிரதம அதிகாரி ஒருவர், நான்கைந்து வியாபாரிகளுடன் சேர்ந்து கூட்டுக் களவாணித்தனம் பண்ணினாராம்.

அவர் செய்த மோசடி எவ்வளவு—எந்த வகையில் மோசடி நடைபெற்றது என்பது தெரியவில்லை.

அந்த முன்னாள் அதிகாரிமீது வழக்குத் தொடரப்பட்டதில் அவருக்கு 3 ஆண்டு கடுங்காவல் தண்டனையும், ரூ. 10,000 அபராதமும் டெல்லி நீதிபதி ஒருவரால் விதிக்கப்பட்டிருக்கிறது.

பி. பி. பர்காவா என்ற அந்த அதிகாரி, வேறு ஆறு பிரபல நெய் வியாபாரிகளுடன் சேர்ந்து, சர்க்காரை ஏமாற்ற சதி செய்ததாக வழக்கு.

இந்த ஏழுபேர்களுக்கும் நீதிபதி தலா 10,000 ரூபாய் அபராதமும், ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனையும் விதித்துத்தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

பர்காவா என்ற அந்த முன்னாள் அதிகாரிக்கு மட்டும், இலஞ்சத் தடுப்புச் சட்டத்தின்கீழ் மேலும் இரண்டு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை தரப்பட்டுள்ளது; இரண்டு தண்டனைகளையும் அவர் ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும்.

ஆக்ராவில் உள்ள நெய் பரிசோதனை நிலையத்தைச் சேர்ந்த மேஜர்தக் கூர்சிங் என்ற உயர்தர அதிகாரியும், மேலும் ஆறு பேர்களும் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஜாமீனில்விட உத்திரவு

சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஏழுபேரும் ஜாமீனில் விடும்படி சண்டிகாரில் உள்ள பஞ்சாப் உயர்நீதி மன்றத்திற்கு மனு செய்துக்கொண்டதின் பேரில், ஸ்ரீ பர்காவா உள்பட ஆறுபேரை ஜாமீனில் விடுதலை செய்யும்படி உயர்நீதி மன்றம் உத்திரவு பிறப்பித்துள்ளது.

மற்றொரு எதிரி, உத்திரப் பிரதேச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பஞ்சாப் உயர்நீதி மன்ற உத்தரவு டில்லி மாவட்ட நீதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. எதிரிகள் தலா ரூ. 20,000-க்கு ரொக்க ஜாமீனும் அதே தொகைக்கு சொந்த ஜாமீனும் கட்டுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்தியாவில் டெலிவிஷன் சாதன அமைப்பு?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 'டெலிவிஷன்' சாதன அமைப்புக்காக, வானொலி நிலையங்களை விரிவாக்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 9 கோடியிலிருந்து ரூ. 40 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளதாம்.

சுமார் ரூ. 3,65,00,000 மதிப்புள்ள துணி ஆலை இயந்திர சாதனங்கள் 1955-ல் இந்தியாவில் தயாரிக்கப்பட்டன.

டில்லியின் அடக்குமுறை வெ

முப்பது தீவிரவாதிகள் படுகொ

நாகர் சுதந்திர தாகம் அதிகரிக்கிறது

ஷில்லாங், மே 2—

நாகர்களின் விடுதலைக்காக, சுதந்திரத்தாகம் கொண்ட தீவிரவாதிகள், ஏராளமான உயிர்களைப் பலிதந்துகொண்டிருக்கிறார்கள்.

டில்லி ஏகாதிபத்தியவாதிகளின் அடக்குமுறை வெறி, தினந்தினம் பல தீவிரவாதிகளைச் சுட்டுக் கொன்று குவித்துக்கொண்டிருக்கிறது.

கடந்த ஏப்ரல் 28-ந் தேதியன்று டில்லி இராணுவத்தினர், நாகமலைகளுக்குள் புகுந்து சுமார் 30 பேர்களின் உயிரைக்குடித்திருக்கின்றனர்.

லைசென்ஸ் பெறாத ஆயுதங்களை ஒப்படைத்துவிட வேண்டும் என்று 15 நாள் தவணை தந்து, மேஜர்—ஜெனரல் கோஷெர் என்ற டெல்லி இராணுவத் தளபதி உத்தரவிட்டிருந்தாராம்; ஆனால், இந்த உத்தரவிற்கு தீவிர நாகர்கள் எவரும் பணிந்துவிடவில்லையாம்! வெட்கமில்லாமல், டெல்லி சர்க்காரே இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றனர்.

பல முனைகளிலுமிருந்தும் ஏகாதிபத்தியவாதிகள் அடக்குமுறைகளை ஏவியிருந்தும்கூட, தீவிரவாதிகள் தங்களின் போராட்டத்தைக் கைவிடாது, தொடர்ந்து நடத்திவருவது, 'டெல்லி பெரிய மனிதர்'களுக்கு ஆத்திரத்தைத் தான் தருகிறதே தவிர, தீவிரவாதிகளின் கோரிக்கையை ஆலோசிக்கத் தூண்டக் காணோம்.

வடநாட்டில் விலை ஏற்றத்தைத் தடுக்க டில்லியின் நடவடிக்கை

நியாய விலைக் கடைகள் திறந்திருப்பதாக மந்திரி தகவல்

புதுடில்லி, மே 2—

உணவுப் பண்டங்களின் விலை இறங்கிவருவதாக மந்திரி கிருஷ்ணப்பா மக்கள்சபையில் தெரிவித்திருக்கிறாராம்.

விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கு மத்திய சர்க்காரின் உதவி கிடைத்துள்ள மாநிலங்கள்கூட, வடநாட்டு மாநிலங்கள்தான்!

ஏறிய விலைகளை இறக்குவதற்காக பம்பாய், மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில்தான், நியாய விலைக் கடைகளைத் திறந்திருக்கிறது சர்க்கார்.

இந்தத் தகவலையும் அந்த அமைச்சரேதான் தந்திருக்கிறார்.

மற்றுமோர் வடநாட்டு மாநிலமான ஒரிசாவிற்கு அந்த மந்திரி இரண்டொரு நாளில் செல்லவிருப்பதாயும், அங்கு ஏராளமான நியாய விலைக் கடைகளைத் திறக்க அவர்கள் திட்டமிட்டிருப்பதாயும் அந்த மந்திரி கூறியிருக்கிறார்.

டில்லி சர்க்காரின் கிடங்குகளிலிருந்து உணவுப் பண்டங்களைத் தரவும் அவர்கள் சம்மதித்திருக்கின்றனராம்.

"சூதாட்டப் பேரங்களில் வியாபாரிகள் ஈடுபடுவதினாலேயே விலைவாசிகள் உயர்ந்திருப்பதால், பாங்குகளிடம் கடன் பெற்று வர்த்தகர்கள் வைத்துள்ள சரக்குகளை பறிமுதல் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதா?" என்ற பிரோஸ் காந்தியின் கேள்விக்கு துணை உணவு அமைச்சர் பதில் கூறியதாவது:—

"சரக்குகளை கைப்பற்ற போதிய தருணம் வாய்க்கவில்லை; வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. பாங்குகள் அதிகப் பணம் தருவது, இந்த விலை உயர்வுக்கு எந்த அளவுக்கு அடிகோலியிருக்கிறது என்பதை ஆராயும்படி ரிசர்வ் பாங்கிக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

"விலை உயர்வைத் தடுப்பதற்கும் நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கும் மாநிலங்களுக்கு எவ்வளவு அரிசி வேண்டுமாயினும் தர அரசாங்கம் தயாராயிருக்கிறது."

★★★

மாநில மாநாட்டில்!

★

சிறப்புத் தலைப்புகள் மீதும், தீர்மானங்கள் மீதும்

பேசுவோர்:

★

அண்ணா

என். வி. நடராசன்	ஈ. வெ. கி. சம்பத்	மு. கருணநிதி
கே. ஏ. மதியழகன்	க. அன்பழகன்	கண்ணதாசன்
சி. பி. சிற்றரசு	டி. கே. சீனிவாசன்	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
என். எஸ். இளங்கோ	கி. மனோகரன்	காஞ்சி—கல்யாணசுந்தரம்
சத்தியவாணிமுத்து	தில்லை-வில்லாளன்	கா. அப்பாதுரையார்
ப. உ. சண்முகம்	எம். எஸ். இராமசாமி	அரங்கண்ணல்
அருண்மொழி	ஏ. கோவிந்தசாமி	அ. பொன்னம்பலனர்
இரா. சு. தங்கப்பழம்	எம். பி. சுப்பிரமணியம்	ஆர். எஸ். பாண்டியன்
கே. கே. நீலமேகம்	கே. வி. கே. சாமி	அலமேலு அப்பாதுரை
பி. ஆர். கோகுலகிருஷ்ணன்	டி. கே. பொன்னுவேலு	அலிசேக்மன்சூர்
பூங்கோதை	பொற்செல்வி	ப. கண்ணன்
மணிமொழியார்	எஸ். அப்பாவு	கோவை-செழியன்
வாணிதாசன்	சுரதா	எம். எஸ். சிவசாமி
க. அறிவழகன்	எஸ். எஸ். தென்னரசு	மாறன்
ஈழத்தடிகள்	வி. ஜி. இராசையா	இளமுருகு
டி. வி. நாராயணசாமி	வி. எஸ். கோவிந்தராசன்	பெருமாள்
கே. கோவிந்தசாமி	சி. டி. தண்டபாணி	கே. ஏ. கிருஷ்ணசாமி
ஜி. பராங்குசம்	ஏ. கே. வில்வம்	ஈ. ஆர். கிருஷ்ணன்
எஸ். வி. லிங்கம்	ஜெபக்கனி	சி. வி. இராசகோபால்
பி. என். இராமானுசம்	டி. சண்முகம்	தமிழரசு
க. நெடுஞ்சேழன்	எஸ். வேதரத்தினம்	சிற்றுளி-சுப்பிரமணியம்
சி. எம். அண்ணுமலை	ஏ. எல். சி. கிருஷ்ணசாமி	போளூர்-சுப்பிரமணியம்
முல்லை சத்தி	இளம்பரிதி	கே. எம். கண்ணபிரான்
ஆர். பாலகுருசாமி	வி. முனுசாமி	ஏ. கே. சாமி
வி. சிவப்பிரகாசம்	குடவாசல் கிருஷ்ணமூர்த்தி	ச. சிவப்பிரகாசம்
இரா. சாம்பசிவம்	பொன். சொக்கலிங்கம்	எஸ். ஏ. ரசமாணிக்கம்
இ.ல.மா. சவுந்திரபாண்டியன்	கே. எஸ். சந்தானம்	வி. சண்முகநாதன்
வி. எம். ஜான்	டி. பி. அழகமுத்து	பெங்களூர் எஸ். வி. பதி
கே. டி. எஸ். மணி	வி. சின்னத்தம்பி	ப. நாராயணன்
கருத்தோவியன்	சி. முனுசாமி	குளித்தலை முத்துகிருஷ்ணன்
தா. ஆவுடையப்பன்	ப. இராமலிங்கம்	தூத்துக்குடி நடராசன்
சி. ஆர். பாலசுந்தரம்	தாண்டவன்	குப்புசாமி
இலங்கை அதிமணி	பம்பாய் தியாகராசன்	டி. எம். பார்த்தசாரதி
சா. அமீது	உ. பில்லப்பன்	பு. இராமசாமி
சமதர்மம்	மா. தங்கவேலர்	சாமி பழனியப்பன்
இராம. சுப்பையா	டபிள்யூ. கே. துரைசாமி	சித்தூர் பார்த்தசாரதி
முல்லை வடிவேலு	எஸ். கந்தசாமி	திருப்பத்தூர் நடேசன்
வி. டி. அண்ணுமலை	வகாப்	நாகசுந்தரம்
டாக்டர் அருணுசலம்	ஏர்வாடி அப்துல்காதர்	கோடீஸ்வரராவ்
வன்னியபெருமாள்	எஸ். எஸ். பி. லிங்கம்	மேத்தா
சிவசண்முகசுந்தரம்	என். கிட்டப்பா	அடைக்கலம்
து. உ. இராமநாதன்	குன்றத்தூர் சம்பந்தம்	டி. ஆர். சுப்பிரமணியம்
ஒளியழகன்	கலியழகன்	சிறுமி பானுமதி

★★★

கல்கத்தா அருகே புராதனச் சின்னங்கள்

வரலாற்று உண்மைகளை அறிய உதவுமாம்

கல்கத்தா, மே. 1—

கல்கத்தாவிற்கு வடக்கே 23 மைல் தொலைவிலுள்ள சந்திர கேதார்கர் எனுமிடத்தில் ஏறக்குறைய 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த மிகப் பழைய நகரம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. மௌரிய பேரரசுக்கால வரலாற்றுச் சம்பவங்கள் பற்றி இதுவரை தெரியாமலிருந்த பல அரிய உண்மைகள் இதிலிருந்து தெரியவருமாம்.

நீண்ட சதுரவடிவில் அமைந்திருந்த இந்நகரைச் சுற்றி பாதுகாப்புச் சுவர் இருந்ததாகத் தெரிகிறதாம்; அந்த மதில் சுவரின் சின்னங்கள் இப்பொழுதும் காணப்படுகின்றனவாம்.

இங்கு முன்னரே நடைபெற்ற புதை பொருள் ஆராய்ச்சிகளில் மௌரிய, குஷான், குப்த ஆட்சிக் காலங்கள் பற்றிய வரலாற்றுச் சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியாவில் 1954-ல் மொத்தம் 2,39,168 அவுன்ஸ் தங்கம் உற்பத்தியாயிற்று. அதில், 2,20,522 அவுன்ஸ் தங்கம் மைசூர் தங்கச் சுரங்கங்களிலிருந்து கிடைத்ததாகும்.

கோடிக்கணக்கில் பணம்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

படி உலக அங்கீகாரம் பெற்ற ஒன்று சந்தேகப்படத்தக்க பலன்களை உண்டாக்குவதாக எதிர்ப்பு இயக்கம் நடத்திய திரு. இராசகோபாலாச்சாரியார், பரிசோதனைக் கட்டத்தைத் தாண்டாத அம்பர் இராட்டைக்கு ஆதரவு தருவது எங்ஙனம்? அம்பர் இராட்டை விஷயத்திலும் இதே சந்தேக மனப்பான்மையை ஏன் அவர் கொள்ளவில்லை?

"ஏழை மக்களின் வரிப்பணம் கோடிக்கணக்கில் செலவிடப்பட்ட பிறகு அம்பர் இராட்டையின் தன்மை பற்றிய தீர்ப்பு [வெளியாகும்; 'நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாயுள்ளவற்றை அடிக்கடி எனக்கு நினைவுபடுத்திக்கொள்வதற்காக நான் ஒரு அம்பர் இராட்டையை எப்போதும் என் அறையில் வைத்திருக்கிறேன்' என்று அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியிருக்கிறார். இத்தகைய மனப்பான்மையை மேற்கொள்வதே அறிவுடைமையாகும்."

—மந்திரி

...க் கூட்டம்

★

சித்தாலே:

பிள்ளையார் கோயில் திடல்

தி. மு. கழகத் துவக்க விழா

6—5—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

எஸ். பி. வைரன்

பேசுவோர்:

எம். ஏ. இரசாக்

க. ம. வ. நடராசன்

பெ. பிச்சை

பெண் பாடசாலை ஆண்டுவிழாவும் —பெற்ருேர் தின விழாவும்

சென்னை — இராயபுரம், கல் மண்டபம் நகராண்மைக் கழக ஆரம்பப் பெண் பாடசாலையின் 19-வது ஆண்டு விழாவும், பெற்ருேர் தின விழாவும் 5—5—56 மாலை 5 மணியளவில், பள்ளி நிலையத்தில், திரு. வி. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும். திரு.வி. கோவிந்து(பிள்ளை) பேசுவார்; திரு. எம். பி. எஸ். பாலகிருஷ்ணன் மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்குவார்.

கண்ணதாசன்

அறிவிப்பு

"தி. மு. கழகத் தலைமை நிலையம் இசைவு தராததால் 'குமுதம்' இதழின் 'திராவிடஸ்தான்' கட்டுரைப் போட்டியின் நீதிபதி பொறுப்பிலிருந்து 10 நாட்களுக்கு முன்பே விலகிவிட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

திருக்குறள் வகுப்பு

சென்னை —பெத்துநாய்க்கன் பேட்டைத் தாய்மார் கழகச் சார்பில், 5-5-56 பிற்பகல் 2-30 மணிக்குமேல் சென்னை-1, முத்து கிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். மயிலை சிவமுத்து 'ஒற்ருடல்' என்பது குறித்துப் பேசுவார்.

சென்னை — 12-வது வட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்

6—5—56 காலை 9 மணி யளவில், வட்டக் கழகப் பணி மனையில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க. பொதுக்குழு

16—5—56-ல் திருச்சியில் நடைபெறும்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம், மாநில மாநாடு நடைபெறும் பந்தலில் அமைந்துள்ள 'பொதுக்குழு விடுதி'யில் 16—5—56 புதன்கிழமை காலை 10 மணி யளவில் நடைபெறும்.

—தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வங்க-பீகார் இணைப்புக்கு சமாதி!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யதாகக் காணப்பட்டது. நான் குறிப்பிட்ட 'கூட்டு' என்பதற்கு, தனித்தனியாக இரு இராஜ்யங்களும் குறிப்பிட்ட விவகாரங்களில் ஐக்கிய ஆட்சியாகக் கூட்டாக செயல்படுவதையும், குறிப்பிட்ட இராஜ்யங்களுக்கு மட்டுமே சம்பந்தமுடைய விவகாரங்களில் தனித்தனியாக செயல்படுவதையும் விளக்கமாகக் கொடுத்திருந்தேன்.

"அதன் பிறகு பிப்ரவரி முதல் தேதி முதற்கொண்டு கடந்த இரண்டு அல்லது மூன்று மாதங்களாக நான் கொடுத்துவந்த நிருபர் சந்திப்புகள் அனைத்திலும், இத்தகைய இணைப்பு ஏற்பாட்டை, ஏற்கவிரும்பாத மக்களிடம் வலுவில் திணிக்கப்பட மாட்டாது என்பதை வலியுறுத்தி வந்திருக்கிறேன். இணைப்பின் உள்ளடக்கத்தை நானும் கூட்டுத் தோழர்களும் விளக்க முயர்சித்து வந்திருக்கிருேம். இத்தகைய ஒரு முயற்சியில் மக்களின் கருத்தறிவதற்கு சிறந்த சாதனமாக இருந்து வருவது, அம்முயற்சியை முதன்மையாகக்கொண்டு நடைபெறும் மக்களின் வாக்களிப்பேயாகும்.

"இணைப்பை தேர்தல் பிரச்சினையாகக் கொண்டு கல்கத்தா தேர்தல் நடைபெற்று இருக்கிறது. இணைப்பு எதிர்ப்பைக் கூறியே தேர்தலில் கலந்துகொண்ட இணைப்பு எதிர்ப்புக் குழுத் தலைவர் வாக்குகளை சேகரித்திருக்கிருர்.

"இணைப்புபோன்ற ஒரு கருத்து மக்கள் சபையில் சட்டமாக நிறைவேற்றப்பட்டுவிட்ட போதிலும், அதனுல், அது அடையக் கருதும் விளைவை அடைந்துவிட முடியாது. அடையக் கருதும் மூல நோக்கமான இரண்டு ராஜ்யங்களின் ஒற்றுமையை, ஏதாவது ஒரு ராஜ்ய மக்கள் ஏற்க மறுக்கும் நிலையில், ஒருக்காலும் சட்டத்தால் உருவாக்கிவிட முடியாது."

இணைப்பைக் கைவிட்டுவிட்டதனது முடிவை பீகார் முதலமைச்சருக்கும், இந்தியப் பிரதமருக்கும் அனுப்பி இருப்பதாகவும், அவர்களுடைய பதிலை ஆவலாக எதிர்பார்த்து இருப்பதாகவும் வங்க முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

கம்யூனிஸ்டு கட்சிக்கு புத்தி வந்துவிட்டதாம்!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வெடுத்ததாம். இதுவும் அந்த கம்யூனிஸ்டு 'புரட்சித் தலைவர்' திருவாய்மலர்ந்தருளியுள்ள வாசகங்கள்தான்.

'அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற துணிச்சலான நோக்குடன், ஆந்திரா தேர்தலில் எல்லா இடங்களுக்கும் போட்டியிட்ட பரிசோதனையை, வேறு எங்கும், வரப்போகும் தேர்தலில் கம்யூனிஸ்டுக் கட்சி நடத்த முன்வராது,' என்றும் இராமமூர்த்தி அய்யர் கூறினாராம். ஆந்திராவில் உடைபட்ட மூக்கு இன்னும் சரிசெய்யப்படவில்லை என்றும், அந்த வரலாற்றுச் சிறப்புப் பெற்ற தோல்வி மகத்தான பாடங்களை கற்பித்திருப்பதாயும் கம்யூனிஸ்டுத் தலைவர் கருதுகிருராம்.

'எங்கே மக்களின் பிரதிநிதிகளாக முடியும் என்ற உரிமையை நாங்கள் பெற்றிருக்கிருேமோ, அங்கு மட்டும்தான் கம்யூனிஸ்டுகள் போட்டியிடுவர்' என்றும் அவர் தகவல் தந்திருக்கிருர்.

வண்டிகளின் வேகத்தைத் தடுப்பதற்குத் திட்டம்

அரசியலாரின் போக்குவரத்து வண்டிகள் ('பஸ்', 'லாரி'கள்) அளவுக்கு மீறிய வேகத்துடன் ஓட்டப்படுவதைத் தடுக்க 'கவர்னா' என்னும் கருவியையும், 'டெக்கோக்கிராப்' என்னும் கருவியையும் வண்டிகளில் பொருத்துவது பற்றி சென்னை அரசினர் யோசித்து வருகின்றனராம்.

இறக்குமதி வரி உயர்வு

வெள்ளிக்கட்டிகள், வெள்ளிப் பாளங்கள், வெள்ளித் தகடுகள் ஆகியவற்றின் இறக்குமதி வரியை இந்தியப் பேரரசினர் அதிகரித்திருக்கிருர்கள்.

மு. கருணாநிதி

அறிவிப்பு

"'குமுதம்' இதழில் 'திராவிடஸ்தான வேண்டுமோ — வேண்டாமா?' என்ற கட்டுரைப் போட்டிக்கு நானும் ஒரு நீதிபதியாக இருப்பதற்கு தலைமை நிலையம் இசைவு தராத காரணத்தால், அந்த நீதிபதிக் குழுவில் நான் அங்கம் வகிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

நாஞ்சில் மாவட்ட தி. மு. க. தோழர்கட்கு:

வேண்டுகோள்

★

" திருச்சியில் மே. 17, 18, 19, 20 தேதிகளில், மாநில மாநாடு சீரும், சிறப்புடனும் நடைபெற வேண்டிய சகலவித ஏற்பாடுகளும் துரிதமாக நடைபெற்றவண்ணமுள்ளன. நமது மாவட்டத்திலுள்ள வரவேற்புக் குழு பிரதிநிதிகளும், பார்வையாளர்களும் பெருவாரியாகக் கலந்துகொள்ள வேண்டுமென்று நா. மா. தி. மு. கழகம் பெரிதும் விரும்புகிறது. திருச்சி மாநில மாநாட்டுக்குச் செல்லவிருக்கும் நமது மாவட்டக் கழகத் தோழர்கள், கீழ்கொடுக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகள்படி நடந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள் :—

1. நாஞ்சில்மாவட்டத்திலிருந்து செல்லும் தி. மு. கழகத் தோழர்கள் மே மாதம் 16-ந் தேதி மாலையில் திருச்சியில் இருப்பதற்கு தகுந்தாற்போல் தங்களுடைய பயணத்தைத் துவங்க வேண்டுமென்று பணிவன்புடன் வேண்டுகிருேம். இந்த முறையினுல், நமது மாவட்டம் 17-ந் தேதி ஊர்வலத்தில் கலந்துகொள்ள வசதி ஏற்படுகிறது.
2. நமது மாவட்டத்தில் உள்ள கிளைக் கழகச் செயலாளர்களும்; தேர்ந்தெடுக்கப்பட்ட மாநாட்டுப் பிரதிநிதிகளும், உடனடியாகத் தங்களுடைய கட்டணத் தொகை ரூ. 5-ம் வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் அம்பில் தருமலிங்கம் முகவரிக்கு அனுப்பிவைக்க கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள். மேலும், கிளைக் கழகங்களின் சார்பாக, அனுப்பவேண்டிய கழகக் கொடிகளை, தங்களது ஊரின் பெயர் பொறித்து, நமது மாவட்டக் கழகத்தில் சேர்த்து அனுப்ப வேண்டும். அனுப்பப்படும் கழகக் கொடிகள், மே. 16ந் தேதி, திருச்சி மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவரிடம் கிடைப்பதற்கு வேண்டி, நமது கழகத் தோழர் ஒருவர் மூலம் அனுப்பிவைக்கப்படும்.
3. இந்த மாநாட்டில்தான் திராவிட நாடு விடுதலை பெறுவதற்கான தீவிரத் திட்டங்கள் நிறைவேற்றப்படும். எனவே, சிரமம் பாராமல், பல அலுவல்களிருப்பினும் அதையும் ஒதுக்கிவைத்து, மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமென்று கழகத் தோழர்களையும், பொதுமக்களையும், நா. மா. தி. மு. கழகம் கேட்டுக்கொள்கிறது.
4. கிளைக் கழகக் கொடி 2×3 அளவில், கழகப் பெயர் பொறித்து இருக்கவேண்டும்.

என்று, நாஞ்சில் மாவட்ட தி மு க. செயலாளர் வி. எம். ஜான் அறிவிக்கிருர்.

சிறப்புக் கூட்டத்தில் அண்ணு

வெங்கிடங்கால் 'அறிவகம்' கட்டிட நிதிக்காக, நாகை, ஸ்டார் டாக்கீசில், 6—5—56 காலை 9 மணியளவில் சிறப்புக் கூட்டம் நடைபெறும்.

அண்ணு அவர்கள், 'இமயத்தில் நாம்' என்ற தலைப்பில், சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

தோழர் அரங்கண்ணல் அவர்களும் பேசுவார்.

நன்கொடை: ரூ. 1; அணு 8

மே தின விழாப் பொதுக்கூட்டம்

★

ஆரணி :

(பொன்னேரி வட்டம்)

கடைத்தெரு பிள்ளையார் கோயில் முன்பு

6—5—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

அ. கிருஷ்ணன்

பேசுவோர்:

காஞ்சி-கல்யாணசுந்தரம்

சி. ஆர். பாலசுந்தரம்

டி. ஆர். வரதன்

—ஆரணி தி. மு க

★

புதுவை :

ஒதியஞ்சாலைத் திடல்

6—5—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

ச. சிவப்பிரகாசம்

பேசுவோர்:

மு. கருணாநிதி

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

—புதுவை வட்ட தி.மு.க

★

திருப்பூர் :

நொய்யல் நதி மைதானம்

6-5-56 மாலை 6-30 மணிக்கு

தலைவர் :

இரா. பாலசுந்தரம்

பேசுவோர்:

கோவை-செழியன்

மு. முத்துரத்தினம்

சு. துரைசாமி

—திருப்பூர் தி மு க

தூத்துக்குடி மஜீத் மன்ற ஆண்டு விழா

6—5—56 மாலை 6-30 மணியளவில், வட்டத்தெப்பம் பக்கத்தில், தோழர் பி. சண்முகம் தலைமையில், மேற்படி மன்ற முதலாவது ஆண்டு விழா நடைபெறும். தோழர்கள் கி. மனோகரன், கே. வி. கே. சாமி, எப் ஏ ஜோசப் ஆகியோர் பேசுவர்.

பெங்களூர்–சீராமபுரம் தி. மு. கழகத் தோழர்களுக்கு :

6—5—56 காலை 8 மணி யளவில், கழகப் பணிமனையில், கழகச் செயற்குழுக் கூட்டமும், காலை 10-மணி யளவில் உறுப்பினர் கூட்டமும் நடைபெறும். அதுபோது, வரவு-செலவுக் கணக்குகள், மாநில மாநாடு பற்றிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

முன்னுள் மன்னரில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு-கொச்சி, மைசூர், ஜெய்ப்பூர் மன்னர்கள் மட்டும் கவர்னர்களாக பதவி வகிக்க விரும்பியுள்ளனர் என்றும், அவர்கள் முறையே தங்கள் தங்கள் மாநிலங்களின் கவர்னர்களாக இருப்பர் என்றும், கூறப்படுகிறது.

மற்றப்படி, புது மாநிலங்கள் அமைந்த பின், கவர்னர்கள் மாற மாட்டார்கள் எனவும், பழைய கவர்னர்களே தங்களின் ஐந்தாண்டு கால பதவி முடியும்வரை பதவி வகிப்பர் என்றும் தெரியவருகிறது.

சென்னை-மண்ணடி இளைஞர் இசைக் கழக ஆண்டு விழா

6—5—56 மாலை 4-30 மணியளவில், 'பாரீஸ் ஸ்போர்ட்ஸ் ரிக்ரியேஷன் கிளப்,' சென்னை—1, பாரி கட்டிடத்தில், திரு. டி. எஸ். உமாபதி தலைமையில், மேற்படி கழக 9-வது ஆண்டு விழாவும், 'எது வேண்டும்' என்ற நாடகத் துவக்க விழாவும் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்; தோழியர்கள் கே. மல்லிகா, எஸ் சுகுந்தி நடன விருந்தளிப்பர்.

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

6—5—56 இரவு 7 மணியளவில், சென்னை கொருக்குபேட்டை நாகப்ப நாயகன் தெரு, எண். 15, கழகப் பணிமனையில், தோழர் பா. சங்கரனுர் தலைமையில், 'மே விழா' என்ற தலைப்பில், கழகத் தோழர்களும் மற்றும் பலரும் பேசுவர்.

முத்தமிழ் விழா

திருக்கழுக்குன்றம் அடுத்த தேசுமுகப்பேட்டையில், ஆசிரியர்கள் சார்பில் 5—5—56 மாலை 6 மணியளவில், திரு. அ. மாணிக்கம் தலைமையில் முத்தமிழ் விழா நடைபெறும். அதுபோது, தோழியர் அருண்மொழி, தோழர்கள் மு. இராசமாணிக்கம், சு. குருநாதன், ந. நாராயணன் ஆகியோர் பேசுவர்.

தோழர் ந. ஆறுமுகம் குழுவினரின் இசை விருந்தும், முத்தமிழ் மன்றத்தினரால் நடிக்கப்படும் 'நச்சுக்கோப்பை' நாடகமும் நடைபெறும்.

பகுத்தறிவுப் பாசறை திறப்பு விழா

6-5-56 மாலை 6-மணியளவில், சென்னை-மவுண்ட் ரோட், பாட்டர் தோட்டம், பைராங் ஜங் பகதூர் தெரு (மிட்லண்ட் திரைப்படக் கொட்டகைக்கு எதிரில்), 6-ம்எண்ணுள்ள மேற்படி பாசறை மனையில், தோழர் டி. கே. சிவகுமார் தலைமையில், தோழர் இளம்பரிதி திறப்பு விழாவாற்றுவார். தோழர்கள் ஆர். டி. அரசு, நீல-நாராயணன், சே. மு. காதர் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

4—5—56 மாலை 6-30 மணியளவில் சென்னை—1, எண் 17, சாலை விஞயகர் கோவில் தெரு, முத்தமிழ் மன்றப் பணிமனையில் தோழர் கா. வி. இராதாகிருட்டிணன் தலைமையில், 'மே விழா' எனும் பொருள் பற்றி மன்றத் தோழர்களும், மற்றும் பலரும் பேசுவர்.

* * *

வடசென்னை குறள்நெறிக் கழகச் சொற்பயிற்சிக் கூட்டம் 5—5—56 மாலை 6-30 மணியளவில், புலவர் கி. தியாகராசனுர் தலைமையில் நடைபெறும். 'மே தினம்' என்ற பொருள் குறித்துத் தோழர்கள் பலர் பேசுவர். இறுதியாகப் பொதுக்குழு கூடி கழகத்தின் எதிர்காலம் குறித்து ஆலோசிக்கும்.

* * *

6—5—56 காலை 9 மணியளவில், சென்னை—பெரம்பூர் பாரக்ஸ், இராமாநுச தோட்டத் தொருவிலுள்ள திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றப் பணிமனையில் தோழர் கே. ஆர். துரைசாமி தலைமையில் 'தாயகத்தின் நிலை' எனும் பொருள் குறித்துத் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

6—5—56 காலை 9 மணியளவில் சென்னை 16-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் தோழர் எஸ். கோபால் தலைமையில் 'புரட்சி' எனும் பொருள் பற்றித்தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.